**மேற் பிரிவு**
**(12 வயது முதல் 15 வயது வரை)**
**மாதிரிக்கேள்விகள்**

1 சைவசமயம் என்பதின் பொருளைக் கூறுக.
சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடும் சைவர்களின் மதம் சைவசமயம் எனப்படும்.

2 ஆதிகாலத்தில் சைவர்கள் சிவபெருமானை எந்த வடிவத்தில் வழிபட்டார்கள்?
சிவலிங்க வடிவத்தில் வழிபட்டார்கள்.

3 சைவசமய அறிவுப் போட்டியை நடத்துவதால் உங்களுக்கு ஏற்படும் 3 நன்மைகள் கூறுக.
சமயஅறிவு, கடவுள் நம்பிக்கை, பாரம்பரிய வழிபாட்டு முறைகள் பற்றிய விளக்கம், சமயத்தை வளர்த்த பெரியோர்கள் பற்றிய விளக்கம்

4 மும்மலங்கள் என்றால் என்ன?
மும்மலங்கள் ஆணவம், கன்மம், மாயை எனப்படும்.

5 கிரியை என்றால் என்ன பொருள்?
இறைவனை வழிபடும் செயல் முறைகளே கிரியை (பூசை) எனப்படும்.

6 சைவ சமயத்தவர் பல்வேறு மூர்த்திகளுக்குக் கோயில் அமைத்து வழிபடுகிறார்கள். இப்படி வழிபடும் மூர்த்திகள் பல இருந்தாலும் சைவர்களிடம் ஆழமாக வேரூன்றி இருக்கும தனித்துவம் மிக்க நெறி – கொள்கை என்ன?
வழிபடும் மூர்த்திகள் பல இருந்த போதிலும் இவை அனைத்தும் சிவபரம் பொருளான ஒன்றே – அதாவது இறைவன் ஒருவனே என்ற சிவநெறிக் கொள்கை சைவர்களிடம் ஆழமாக வேரூன்றியிருக்கும் தனித்துவம் மிக்க கொள்கை ஆகும்.

7 சிவராத்திரி எதைக் குறிக்கிறது?
சிவபெருமான் இலங்கோற்பவராகத் சோதி வடிவைச் சுருக்கிப் பின்பு சிவலிங்க வடிவமாகத் தோன்றிய தினத்தைச சிவராத்திரி குறிக்கும்.

8 சைவ சமயத்தில் சிவபெருமானை எப்படி வணங்குவார்கள்?
உருவ வழிபாடு, அருவவழிபாடு, அருவுருவ வழிபாடு

9 திருக்கோணேச்சரம் கோயில் எங்கு உள்ளது?
இலங்கையில் உள்ள திருகோணமலையில் காணப்படும் திருகோணமாமலையின் உச்சியிலே உள்ளது.

10 சைவர்களின் சமய நூல்கள் எவை?
சைவசித்தாந்த நூல்கள், திருமுறை நூலகள்.

11 உலகில் எத்தனை கடவுள் உள்ளனர்?
கடவுள் ஒருவரே.

12 உயிர்களுக்கு அழிவு உண்டா இல்லையா என்பதைப் பற்றிச் சைவ சித்தாந்தம் என்ன கூறுகிறது.
உயிர்களுக்கு அழிவு இல்லை என்று சைவசித்தாந்தம் கூறுகிறது.

13 “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” - இதைக் கூறியவர் யார்? எங்கே கூறியுள்ளார்?
இதைக் கூறியவர் ஔவையார். கொன்றைவேந்தன் நூலில் கூறியுள்ளார்.

14 கோயில் இல்லாத ஊரில் ........... என்று தொடங்கும் ஒரு பழமொழி உண்டு. அதைச் சொல்லவும்
கோயில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம் என்பது அந்தப் பழமொழி.

15 கோபுரத்திற்கு வேறு பெயர் தெரியுமா?
கோபுரத்தைத் தூலலிங்கம் என்றும் கூறுவர்.

16 கோயில்களின் கோபுரங்கள் ஏன் உயரமாக அமைக்கப்பெற்றுள்ளன? உயரமான கோபுரங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவை இறைவனின் முழுமுதற்றன்மையை உணரவைத்து அவன்மேல் பத்தி செலுத்த வேண்டுமென்ற எண்ணத்தை எங்கள் மனதிலே உருவாக்குகின்றது.

17 ஆலயம் தொழுவது .......... என்று தொடங்கும் ஒரு பழமொழி உண்டு. அதைச் சொல்லவும்.
ஆலயம் தொழுவது சாலமும் நன்று என்பது அந்தப் பழமொழி

18 கொடிமரம் எதனைக் குறிக்கும்?
கொடிமரம் சிவத்தைக் குறிக்கும்.

19 கொடிமரத்திலே காணப்படும கொடிச் சீலையும் தருப்பைப் கயிறும் எவற்றைக் குறிப்பிடுகின்றன?
கொடிமரத்திலே காணப்படும் கொடிச் சீலை ஆன்மாவையும் தருப்பைக் கயிறு பாசத்தையும் குறிப்பிடுகின்;றன.

20 திருமாலின் ஐம்படை எவை?
வில், வாள், தடி, சங்கு, சக்கரம்

21 பிரணவ மந்திரத்தின் பொருள் கூறமுடியாது தடுமாறிய பிரமனை முருகப் பெருமான் என்ன செய்தார்?
தலை கலங்கும்படி குட்டினார். பின்பு பிரமனைச் சிறையில் அடைத்தார்.

22 முருகக் கடவுள் எவ்வாறு தோன்றினார்?
சிவபெருமானின் நெற்றிக் கண்களில் இருந்து புறப்பட்ட 6 தீப்பொறிகளும் சரவணப்பொய்கையை அடைந்ததும் ஆறு திருக்குமாரர்களாக உருவெடுத்தன. ஆறு முகங்களும் பன்னிரு தோள்களும் கொண்ட அழகிய தோற்றத்துடன் முருகப்பெருமான் தோன்றினார்.

23  கந்தசட்டி (கந்தசஷ்டி) எந்த மாதத்தில் வருகிறது?
ஐப்பசி மாதம் பூர்வபக்கம் பிரதமை முதல் சட்டி (சஷ்டி) வரை ஆறு நாள்கள் சட்டி (சஷ்டி) விரதம் கொண்டாடப்படும்.

24  முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகள் எவை?
பழனி, சுவாமிமலை, பழமுதிர்சோலை, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருத்தணிகை.

25  இலங்கையிலுள்ள மிகப் பழமையான தலமாகிய கதிர்காமத்தில் கோயில் கொண்ட முருகப் பெருமானுக்குத் திருப்புகழ் பாடியவர் யார்? அருணகிரிநாதர்.

26   “வேயுறு தோளி பங்கன்” என்று ஆரம்பிக்கும் தேவாரத்தைக் கொண்ட பதிகத்தின் பெயர் என்ன?
இதனைப் பாடியவர் யார்? பதிகத்தின் பெயர் கோளறு பதிகம். இதனைப் பாடியவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

27  1ஆம், 2ஆம், 3ஆம் திருமுறைகளைப் பாடியருளிய நாயனாரின் பெயரைக் கூறுக.
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

28  கோயிலில் மந்திரங்கள் சொல்லி, தேவாரம் ஓதி, மலர்கள் தூவி, தீபம் காட்டி வழிபடும் முறை எப்படி அழைக்கப்படும்?
கிரியை வழிபாடு

29  கோயிலில் காட்டப்படும் தீபங்கள் 3 கூறுக.
ஒற்றைத் தீபம், அடுக்குத் தீபம், கும்ப தீபம், பஞ்சாராத்தி தீபம்

30  அப்பர் பெருமான் - திருநாவுக்கரசு நாயனார் - சூலை நோயால் வருந்திய பொழுது அவரின் தமக்கையாராகிய திலகவதியார் எப்படி அந்த நோயை மாற்றினார்?
அப்பர் பெருமானுக்கு முதலில் திருநீறு பூசியபின்னர் திருவதிகைக் கோயிலுக்குக் கூட்டிச் சென்றார். அங்கே அப்பர் “கூற்றாயினவாறு விலக்ககலீர்...” என்ற பதிகத்தைப் பாடிமுடித்ததுடன் நோயும் மாறிவிட்டது.

31  சைவசித்தாந்தம் என்பதன் பொருளைக் கூறுக.
சைவசமய உண்மைத் தத்துவங்கள் - சைவசமயத்தில் ஞானிகள் சிந்தித்துக் கண்டறிந்த ஆன்மீகம் சம்பந்தப்பட்ட உண்மைக் கருத்துக்கள்

32  சிவபெருமான் எண்குணத்தான் என்று ஏன் அழைக்கிறார்கள்?
சிவபெருமான் எட்டுவித குணங்களைக் கொண்டவர். ஆதலால் அவர் எண்குணர்தான் என அழைக்கப்படுகிறார்.

33   இறைவன் ஐந்தொழில்களை எவ்வண்ணம் நிதழ்த்துகிறார்?
இறைவன் ஐந்தொழில்களையும் பிரம்மா, விட்டுணு(விஷ்ணு), உருத்திரன், மகேசுவரன்(மகேஷ்வரன்) சதாசிவன் ஆகிய திருமேனிகளைத் தாங்கி நிகழ்த்துகிறார்.

34  பஞ்சாங்க வணக்கம் (நமஸ்காரம்) என்றால் என்ன? அது யாருக்குரியது?
உடம்பின் ஐந்து உறுப்புகள் நிலத்தில் அழுந்தும்படி விழுந்து வணங்கும் முறை. இது ஆண்களுக்குரியது.

35  நால் முனிவர் என்னும் தொகைச் சொல் எவர்களைக் குறிக்கும்?
சனகர், சனந்தனர், சனாதரர்,சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களைக் குறிக்கும்.

36  மகளிருக்கு உரிய நாற்குணங்கள் என்று சொல்லப்பட்டவை எவை?
அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு

37  இரு வகை வினைகள் யாவை?
நல்வினை, தீவினை

38  நாற்பயன் என்னும் தொகைச் சொல் எவற்றைக் குறிக்கும்?
அறம், பொருள், இன்பம், வீடு

39  ஐந்தொழில்களையும் இயற்றும் சிவ வடிவம் எது?
நடராசவடிவம். (நடராஜவடிவம்)

40  படைப்புக் கடவுளான பிரம்மாவிற்கு வேறு பெயர்கள் 3 கூறுக.
நான்முகன், பங்கயன், மலரோன்

41  நான்மறைகள் யாவை?
இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்

42 துர்க்கை அம்மனுக்கு வேறு பெயர்கள் 4 கூறுக.
மலர்மகள், பராசத்தி, கௌரி, சிம்மவாகினி

43  நவராத்திரி காலத்தில் நடு மூன்று நாள்களில் எந்த சத்திக்கு விசேட பூசை நடைபெறும்?
இலக்குமி (லக்ஷ்மி) தேவிக்கு

44  துர்க்கை அம்மனைத் தொழுவதால் என்ன நன்மை பெறலாம்?
வீரம், தைரியம், வெற்றி ஆகியவற்றைப் பெறலாம்.

45  நவராத்திரியின் சிறப்பு என்ன?
துர்க்கை, இலக்குமி, சரசுவதி, ஆகிய மூன்று சத்திகளையும் வழிபடுவதே நவராத்திரியின் சிறப்பு ஆகும்.

46  தீபாவளி என்பதன் கருத்து யாது?
தீபங்களை – விளக்குகளை வரிசையாக வைத்து வழிபடுதல்

47 எட்டுதிக்குப் பாலகர் யாவர்?
இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்.

48  ஓங்காரம் - இதற்கு இன்னொரு சொல் கூறுக.
பிரணவம்.